# **DEPOSITION OF WITNESS**

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.1 **Deposition of witness for }**
**Defence:**

**Case No.** Sessions Case No.**SC- 121/2015**

| **Name** | முருகேஸ்வரன் | **S/o.** | சிங்கமுத்து |
|---|---|---|---|
| **Village** | சிவகங்கை | **Taluk** | சிவகங்கை |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.1 |
| **Date** | 26-09-2022 | **Age** | 33/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 26.09.2022.**

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:**

ஏற்கனவே எதிரியின் வீட்டினை அடித்து ஓடுகளை நொறுக்கி வீட்டை சேதப்படுத்தியதாகவம் இவ்வழக்கின் 3ம் எதிரி ராஜ்குமாரை அதே சம்பவத்தில் அடித்து காயப்படுத்திவிட்டதாகவும், இவ்வழக்கின் சாட்சி முத்துக்கருப்பன், லதா மற்றும் சதீஷ் என்பவர்கள் மீது சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் அந்த சம்பவத்திற்கு ஒரு வருடம் இரண்டு மாதம் முன்னால் 3ம் எதிரியால் புகார் செய்யப்பட்டு குற்ற எண்.109/2011ல் பிரிவுகள் 294(பி), 323, 427, 506(2) இதச படி வழக்கு பதிவு செய்து விசாரணை நிலுவையில் இருந்த விபரம் எனக்கு தெரியாது. லதா என் உடன் பிறந்த சகோதரி ஆவார். லதாவின் கணவர் பெயர் முத்துக்கருப்பன். குற்ற எண்.109/2011 வழக்கில் எதிரியாக இருந்த முத்துக்குமார் இந்த வழக்கின் 2ம் எதிரி பஞ்சவர்ணத்தின் சகோதரர் என்றால் தவறு. மேற்சொன்ன குற்ற வழக்கில் கேஸை வாபஸ் பெறச் சொல்லி

முத்துக்கருப்பன் மூலமாக எதிரிகளுக்கு அழுத்தம் கொடுத்துவந்தோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் அழுத்தம் கொடுத்தோம் என்றும் எதிரிகள் குடும்பத்தினர் உடன்படாததால் இந்த பொய் வழக்கு கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளின் வீடு சம்பவ சமயத்தில் சேதமடைந்திருந்தது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் சேதமடைந்த வீட்டை நாங்கள் விலைக்கு கேட்டு வற்புறுத்தினோம் என்று சொன்னால் சரியல்ல. குற்ற எண்.109/2011 வழக்கை வாபஸ் பெற எதிரிகள் மறுத்ததாலும் எதிரிகள் சமாதானமாக மறுத்ததாலும் எதிரிகள் புறம்போக்கு வீட்டில் வசிப்பதால் அவர்களை அங்கிருந்து காலி செய்யும் படி முத்துக்கருப்பனை வைத்து மிரட்டி வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. முத்துக்கருப்பனுக்கு ஏதுவாக சம்பவத்தன்று எதிரிகளை மிரட்ட வந்த இடத்தில் எதிர்பாராத விதமாக எங்களுக்குள் தள்ளுமுள்ளு ஏற்பட்டு சம்பவம் நடைபெற்றுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கூறியுள்ள குற்றச்சாட்டிற்கும் இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம் ஆர்.சத்யதாரா, எம்.ஏ., எம்.எல்., 26.09.2022
கூடுதல் மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

//உண்மை நகல்//